செ.வெ.எண்:142 நாள்:27.02.2021

**சட்டமன்ற தேர்தல்-2021 நடத்தை விதிமுறைகள் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சட்டமன்ற தேர்தல்-2021 நடத்தை விதிமுறைகள் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.02.2021) நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்ததாவது.

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்-2021யை முன்னிட்டு நேற்று (26.02.2021) முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி நிர்வாகிகளுடன் முதல் கூட்டம் நடைபெற்றது.

குறிப்பாக அரசியல் கட்சியினருக்கு வாக்குப்பதிவு முன்னரும், வாக்குப்பதிவு பின்னரும் தேர்தல் காலகட்டத்தில் கடைபிடிக்க வேண்டிய தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த கையேடு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த சந்தேகங்களை தீர்ப்பதற்காக இக்கூட்டம் நடைபெற்றது.

மேலும் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்கான அறிமுகக் கூட்டமாகவும் இது நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியரகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் தேர்தல் கட்டுப்பாட்டு அறை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு அறையில் உதவி மையம் அமைத்து அதன் மூலம் அரசியல் கட்சியனர் மற்றும் பொது மக்களுக்கு தேவையான தேர்தல் குறித்த அனைத்து சந்தேகங்கள் மற்றும் கோரிக்கைகள் கேட்டறிந்து அவற்றை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 24 மணிநேரமும் செயல்படக்கூடிய 18 பறக்கும் படைகள், 18 நிலையான கண்காணிப்புக் குழுக்கள், 12 வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த குழுக்கள் குறித்த விபரம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் மாவட்டத்தில் தேர்தல் குறித்த புகார்களை 24 மணிநேரமும் செயல்படும் 04322-221627 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவித்தால் புகார் அளித்த 24 மணிநேரத்தில் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பதற்றமான வாக்கு சாவடிகளை அனைத்து தேர்தல் அதிகாரிகளும் ஏற்கனவே ஆய்வு செய்துள்ளார்கள். அதனை தொடர்ந்து தேர்தல் நடத்தும் அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் அவற்றை பார்வையிட்டு பொது மக்களுக்கு வாக்குப்பதிவு குறித்து நம்பிக்கையூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியத்தை விளக்கும் வகையிலான விழிப்புணர்வு தொடர்ந்து மாவட்ட நிர்வாகத்தின் மூலம்

வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் ஆன்லைன் மூலம் புகார்கள் தெரிவிக்க இந்தியல் தேர்தல் ஆணையம் சிவிஜில் என்ற செயலியினை அறிமுகப்படுத்தி உள்ளது. இதனை பொதுமக்கள் தங்களின் அலைபேசியில் பதிவிறக்கம் செய்து புகார்களை புகைப்பட ஆதாரத்துடன் பதிவேற்றம் செய்து தெரிவிக்கலாம். அதன் புகாரின் அடிப்படையில் தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகளால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதேபோன்று வேட்பாளர்களுக்கென www.suvidha.eci.gov.in என்ற இனையதளம் துவக்கப்பட்டுள்ளது. வேட்பாளர்கள் எவ்வித அனுமதி பெறுவதற்கும் இந்த இணையதள வசதியினை பயன்படுத்தி கொள்ளலாம். பொதுநிகழ்ச்சிகளை பொறுத்த வரை அனுமதி பெறுவதற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்களை தொடர்பு கொண்டு பெற்றகொள்ளலாம். வேட்பாளர்கள் எந்தவித அனுமதி பெறுவதற்கும் தொடர்புடைய தேர்தல் அலுவலர்களை தொடர்புகொள்ள வேண்டும். தேர்தல் அலுவலர் கோரிக்கை பெற்ற 24 மணிநேரத்தில் காவல்துறையினரின் அனுமதி பெற்று அனுமதி கோரிய நபருக்கு உரிய அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்து அரசியல் கட்சியனர் எவ்வித சிரமங்களின்றி மாவட்டத்தில் தேர்தல் நடத்தும் வகையில் ஒத்துழைப்பு வழங்க இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தை கடந்த கால நிகழ்வுகளை கருத்தில் கொண்டு பொறுத்த வரை 125 பதற்றமான வாக்குசாவடிகள் என கண்டறியப்பட்டுள்ளது. அனுமதி பெற்று துப்பாக்கிகள் வைத்திருப்பவர்களுக்கு முறையான தகவல்கள் தெரிவிக்கப்பட்டு அவை காவல்துறை வசம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வுகளில் தேர்தல் விதிமுறைகள் ஏதும் மீறப்படுகின்றனவா என்பது குறித்து அலுவலர்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படும். தேர்தல் விதிமீறல்கள் கண்டறியப்பட்டால் காவல்துறை மூலம் வழக்குப் பதிவு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 1 செக்போஸ்ட் வீதம் மொத்தம் 6 செக்போஸ்ட் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உரிய ஆய்வுக்கு பின் தேவையான இடங்களில் கூடுதல் செக்போஸ்ட்கள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எல்.பாலாஜி சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், சார் ஆட்சியர் ஆனந்த் மோகன்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சந்தோஷ்குமார், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**